**செ.வெ.எண்: 663** **நாள்: 23.10.2024**

# புதுக்கோட்டை மாவட்டம்

## பத்திரிகைச் செய்தி

---

**கால்நடைப் பராமரிப்புத்துறை, Intensive Green Fodder Cultivation in Formers Lands under Irrigated contition, Augmentation of Green Fodder and Chaff Cutter 2024-2025 (Fodder Augmentation Scheme 2024-25).**

புதுக்கோட்டை மாவட்டத்தில் கால்நடை வளர்ப்போர் பயன்பெறும் வகையில் கீழ்கானும் விபரப்படி இன வாரியாக இலக்கு நிர்ணயம் செய்து ஒதுக்கீடு செய்யப்பட்டது.

**இறவைச் சாகுபடியில் தீவிர பசுந்தீவன சாகுபடி**, இரண்டு கால்நடைகளுக்கு குறையாமல் வைத்திருக்க வேண்டும். இறவை பாசன வசதி வைத்திருக்க வேண்டும். பயனாளிகள் 0.25 ஏக்கருக்கு குறையாமல் வைத்திருக்க வேண்டும். குறைந்தபட்சம் 3 ஆண்டுகளுக்காவது பராமரிக்க வேண்டும். ஒரு பயனாளிக்கு 0.25 ஏக்கரிலிருந்து 1 ஏக்கர் வரை மானியம் வழங்கலாம். பயனாளி கடந்த 3 ஆண்டுகளுக்குள் வேறு எந்த அரசு மானியமும் பெற்றிருக்கக் கூடாது. 0.25 ஏக்கருக்கு ரூ.1,375/- மதிப்புள்ள இடுபொருட்களும் வழங்கப்படும்.

**மானாவாரியில் பசுந்தீவன சாகுபடி,** கறவை மாடு வைத்திருக்க வேண்டும். சொந்த நிலமுள்ள பாசன வசதி இல்லாதவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். பயனாளிகளுக்கு குறைந்தபட்சம் 0.5 ஏக்கர் முதல் 2.5 ஏக்கர் வரை மானியம் வழங்கப்படும். தீவன விதைகளும், உரங்களும் முழுவதும் மானியமாக வழங்கப்படும்.

**புல் நறுக்கும் கருவி (Power Operated Chaff Cutter (2HP)@ 50% Subsidy,** குறைந்தபட்சம் இரண்டு கால்நடைகளுக்கு குறையாமல் வைத்திருக்க வேண்டும். மின்சார வசதியுடன் 0.5 ஏக்கர் நிலம் வைத்திருக்க வேண்டும். கடந்த பத்தாண்டுகளுக்குள் இந்த புல்நறுக்கும் கருவி அரசு மானியத்துடன் பெற்றிருக்கக்கூடாது. Power Driven Chaff Cutter 50% மானியம் போக மீதமுள்ள 50% தொகையினை பயனாளி செலுத்திட முன்வரவேண்டும்.

மேற்காணும் திட்டங்களில் தீவன விதைகள் முழுமானியமாக வழங்கப்படும். மேலும், திட்டத்தின் மூலம் பயன்பெற விரும்பும் தகுதியுள்ள கால்நடை வளர்க்கும் விவசாயிகள் சம்பந்தப்பட்ட கால்நடை மருந்தக, கால்நடை உதவி மருத்துவரை அணுகி விண்ணப்பங்களை பெற்று உரிய ஆவணங்களுடன் பூர்த்தி செய்து விண்ணப்பித்திடலாம்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**

புதுக்கோட்டை மாவட்ட செய்திகளை உடனுக்குடன் தெரிந்துக்கொள்ள:

Pro Pudukkottai PRO PDKT @PRO_Pudukkottai Pro.Pudukkottai